# ECHO OF HIS CALL

# அழைப்பின் எதிரொலி

Tamil

₹ 10/-

India's National Spiritual Newspaper

Published monthly in ENGLISH, TAMIL, MALAYALAM, TELUGU, HINDI, KANNADA, MARATHI, BENGALI, GUJARATI, ODIYA, ASSAMESE, PUNJABI, NEPALI, URDU, SINHALA & AFRIKAN

ECHO OF HIS CALL 1969-2019 GOLDEN JUBILEE

REACHING NATIONS

Editor : S. SAM SELVA RAJ | 16 Languages | Senior Associate Editor: Dr. SERENA BEVIN

Vol. XXX YEAR OF OUR LORD JESUS CHRIST, 2025 MAY No. 05


## பரிசுத்த வேதாகமம்

இப்பகுதியை மனப்பாடம் செய்யவும்

### ஏசாயா 56:1- 5

1. கர்த்தர் சொல்லுகிறார்: நீங்கள் நியாயத்தைக் கைக்கொண்டு, நீதியைச் செய்யுங்கள்; என் இரட்சிப்பு வரவும், என் நீதி வெளிப்படவும் சமீபமாயிருக்கிறது.
2. இப்படிச் செய்கிற மனுஷனும், இதைப் பற்றிக் கொண்டிருந்து, ஓய்வுநாளைப் பரிசுத்தக் குலைச்சலாக்காதபடி ஆசரித்து, ஒரு பொல்லாப்பையும் செய்யாதபடி தன் கையைக் காத்துக் கொண்டிருக்கிற மனுபுத்திரனும் பாக்கியவான்.
3. கர்த்தரைச் சேர்ந்த அந்நியபுத்திரன்: கர்த்தர் என்னைத் தம்முடைய ஜனத்தைவிட்டு முற்றிலும் பிரித்துப் போடுவாரென்று சொல்லானாக; அண்ணகனும்: இதோ, நான் பட்டமரமென்று சொல்லானாக.
4. என் ஓய்வுநாட்களை ஆசரித்து, எனக்கு இஷ்டமானவைகளைத் தெரிந்துகொண்டு, என் உடன்படிக்கையைப்பற்றிக் கொள்ளுகிற அண்ணகர்களைக் குறித்துக் கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்:
5. நான் அவர்களுக்கு என் ஆலயத்திலும், என் மதில்களுக்குள்ளும் குமாரருக்கும் குமாரத்திகளுக்குரிய இடத்தையும், கீர்த்தியையும் பார்க்கிலும், உத்தம இடத்தையும், கீர்த்தியையும் கொடுப்பேன், என்றும் அழியாத நித்திய நாமத்தை அவர்களுக்கு அருளுவேன்.

## நீங்கள் சவால்களை சந்திக்க திராணியுள்ளவர்களா? ஜாக்கிரதையாயிருங்கள்!

*Sis. Angel*



சமீபத்தில், என்னுடைய பாஸ்போர்ட்டை நான் தொலைத்துவிட்டேன். எல்லா இடங்களிலும் தேடியும், அதைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அது என்னை பைத்தியமாக்கிக் கொண்டிருந்தது! நான் அதை எங்கோ விட்டுவிட்டேன் என்பது எனக்கு உறுதியாகத் தெரிந்தது, ஆனால் அதை மீட்டெடுக்கச் சென்றபோது, அது போய்விட்டது. ஒவ்வொரு மூலை முடுக்கிலும் தேடினேன், மிகவும் பதட்டமாக இருந்தது. நான் விழித்திருந்தாலும் சரி, தூங்கினாலும் சரி, வேறு எதிலும் கவனம் செலுத்த இயலாதபடி, காணாமல் போன பாஸ்போர்ட் என் எண்ணங்களை ஆக்கிரமித்திருந்தது. மிக முக்கியமாக, எனக்கு அது அவசரமாகத் தேவைப்பட்டது. புதிய ஒன்றிற்கு விண்ணப்பிக்கவோ அல்லது பின்னர் அதை நிதானமாகத் தேடவோ எனக்கு நேரம் இல்லாதிருந்தது.

நான் வெறித்தனமாக என் வீட்டில் தேடியபோது, லூக்கா 15–ல் உள்ள காணாமல் போன ஆடு, காணாமல்போன நாணயம் மற்றும் காணாமல் போன மகன் பற்றிய உவமைகள் என் நினைவுக்கு வந்தன. தொலைந்துபோன ஆடுகளைப் பற்றி நான் படிக்கும் ஒவ்வொரு முறையும், மேய்ப்பன் தொண்ணூற்றொன்பது ஆடுகளை ஏன் விட்டுச் சென்றான் என்று நான் யோசிக்கிறேன்.

தொண்ணூற்றொன்பது ஆடுகளைப் பற்றி அவர் கவலைப்படவில்லையா? தொலைந்து போன ஒரே ஆடு விலைமதிப்பற்றதாக இருந்திருக்க வேண்டும் என்பதைப் புரிந்து

தொடர்ச்சி 4-ம் பக்கம்.....




அழைப்பின் எதிரொலி!

கிறிஸ்தவ யூடியூப் சானல்!

போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களுடன்

நேரடியாக ஜெபிக்க ஓர் நல்வாய்ப்பு!!

5 நிமிடத்தில் தேவ செய்தியும், ஜெபமும்!!

தமிழ், ஆங்கிலம், இந்தி & தெலுங்கு

தினந்தோறும் - காலை 2.00 மணியில் இருந்து

தமிழ் ஞாயிறு ஆராதனை - காலை 8.30 மணிக்கு

* பதிவு செய்யுங்கள் - பிறருக்கும் பகிருங்கள் *

ECHO OF HIS CALL - (1969-2019 GOLDEN JUBILEE YEAR)



# உங்கள் அன்பு சகோதரனிடமிருந்து...



*கர்த்தர்மேல் உன் பாரத்தை வைத்துவிடு, அவர் உன்னை ஆதரிப்பார், நீதிமானை ஒருபோதும் தள்ளாடவொட்டார் – சங்கீதம் 55:22.*

## OUR MISSION POLICY

We should expound and teach the contemporary generation the undiluted teachings of the ancient and early Apostles. It is the need of the hour.


**HON. EDITOR-IN-CHIEF**

Rev. Angeline S. Kumari, M.A., M.Sc., M.Ed.

**Ex MANAGING EDITOR**

Pastor Alex Samson Sam, B.Th., M.Div.

**GENERAL MANAGER**

Bro. N. Prakasam, M.A., M.Sc.(C&P), PGDHRM, MBA.

**ADMINISTRATION**

Sis. Jesy Veena Sam
Adv. K. Puratchivendan, M.Com., C.A., B.L.
Dr. P.E.R. Premchand, M.Sc., M.A., M.Ed., Ph.D.
Dr. C.G.S. Baburao, B.Tech., M.Tech. (DM), Ph.D.
Dr. Rabinder Boaz, M.S. (CMC)

**EDITORIAL BOARD**

Dr. Serena Bevin, M.A., M.Phil., B.Ed.
Sis. Sajini Cherian
Rev. Dr. K.R. Rajasekaran
Rev. Dr. William Robert, Ph.D., DD, D.Lit.

**EDITOR, PUBLISHER & PRINTER**

Pastor S. SAM SELVA RAJ
Echo of His Call Printers
10, Mohammed Abdullah 2nd Street,
Chepauk, Chennai- 600 005, India.
Phone : (+ 91- 44) 2852 8282, 2852 9293, 2854 7766
Cell : (+91) 98410 71852, 98412 71858
95661 31858

**E.MAIL**

sam@echoofhiscall.org
biblecor@yahoo.co.in

**WEBSITES**

www.echoofhiscall.org
www.stpaulsmatriculation.org

**YOUTUBE CHANNEL**

Echo of His Call


கர்த்தருக்குள் மிகவும் பிரியமானவர்களே,

நமது ஆண்டவரும், இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் மகத்தான நாமத்தில் உங்களை அன்புடன் வாழ்த்துகிறோம்.

கடந்த மாத பத்திரிகையான **அழைப்பின் எதிரொலியைப்** படித்து பரவசமடைந்ததாக நீங்கள் தெரிவித்தமைக்கு நன்றி தெரிவிக்கிறோம். தொடர்ந்து உங்கள் ஜெபங்களையும், நல் ஆதரவுகளையும் நல்கி தேவனுடைய இந்த ஊழியங்களைத் தாங்குங்கள். தேவன் உங்களை கட்டாயம் ஆசீர்வதிப்பார்.



நமது செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி வளாகத்தில் நடந்த வாலிபர் முகாம் நிகழ்ச்சி




திறந்தவெளிக்கூட்டத்தில் நமது போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களின் தேவசெய்தி

கடந்த மார்ச் மாதம் நம் சந்தோஷபுரம் **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன்** பள்ளி வளாகத்தில் நடந்த வாலிபர் முகாம், திறந்தவெளிக்கூட்டம், சிறுவர் ஊழியங்கள், தேவசபை ஊழியங்கள், பள்ளி நிகழ்ச்சிகள் யாவையும் தேவன் ஆசீர்வாதமாக்கித் தந்தார். ஏப்ரல் 11–ம் தேதி சிறுவர்கள் பட்டமளிப்பு விழாவும் ஏப்ரல் 17–ம் தேதி வருடாந்திர விழாவும் நடைபெற்றன. தேவஆவியானவர் வல்லமையாக நம்மை வழிநடத்தினார்.

நம்முடைய வேளச்சேரி **நெகேமியா வேதாகமக் கல்லூரி** வளாகத்தில் நடைபெறும் தேவசபை ஊழியங்களையும், சிறுவர் ஊழியங்களையும் தேவன் ஆசீர்வதித்து வருகிறார். வருகிற ஜூன் 2ம் தேதியிலிருந்து ஆரம்பத்திலிருந்து ஒரு வருட இறையியல் டிப்ளோமா வகுப்புகள் தொடர்ந்து கீழ்க்கண்டவாறு நடைபெறவிருக்கின்றன.

(அ) தகுதியுள்ள ஆண் மாணவர்கள் இலவசமாகத் தங்கிப் படிப்பதற்கான முழுநேர **இந்திமொழி** வகுப்புகள்

மற்றும்

(ஆ) திங்கள், செவ்வாய், வியாழன் ஆகிய நாட்களில் மட்டும் மாலை 6.30 முதல் 8.30 மணி வரை மிகவும் குறைந்தக் கட்டணத்தில் இருபாலரும் **தமிழ் மொழியில்** படித்துச் செல்வதற்காக வகுப்புகள்.

இக்கல்வி நமது சேப்பாக்கம், சந்தோஷபுரம் **நெகேமியா வேதாகமக் கல்லூரிகளிலும்** நடைபெறுகின்றன. மேலும், இம்மாலைநேர வேதாகமக் கல்லூரி வேளச்சேரியிலும் இவ்வருடத்திலிருந்து (2025–2026) ஆரம்பிக்கப்பட உள்ளது. நீங்கள் இந்த ஆவிக்குரியக்

**Our Ministries:** ECHO OF HIS CALL Monthly Magazines (16 languages) ✿ BIBLECOR - Postal Courses (3 languages) ✿ YouTube Ministry ✿ Online Courses ✿ Theological Correspondence Courses (2 languages) ✿ Church Planting ✿ Nehemiah Bible Colleges ✿ Gospel Printing Press ✿ Great Commission Partners ✿ St. Paul's Matriculation School ✿ Crusades ✿ Community Development

கல்வி நிலையங்களுக்காக ஊக்கமாக ஜெபிக்கவும், தகுதியுள்ள மற்றும் தேவ அழைப்புப் பெற்ற மக்களுக்கு இக்கல்லூரிகளை அறிமுகம் செய்யுமாறும் வேண்டுகிறோம்.

நீங்கள் அறிந்தபடி வருகிற **2026–ம்** ஆண்டு முதல் நம் **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைகளை அச்சுப்பிரதிகளாகத் தபால் மூலம் அனுப்புகிற விஷயத்தில் சிரமங்கள் ஏற்படலாம். அரசாங்க உத்தரவின்படி நமது பொருளாதார சக்திக்குமேல் அதிகமான தபால் கட்டணங்கள் செலுத்த வேண்டி வரலாம். காகிதம், மை போன்ற அச்சுப்பொருட்களின் விலையும், நிர்வாகச் செலவுகளும் மிகவும் உயர்ந்து விட்டன. அதற்குரிய பொருளாதார வசதி நம்மிடம் இல்லை. ஆனால், **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைகளைத் தொடர்ந்து அச்சிட்டும், சிறப்புத் தபால், கொரியர், இ-மெயில், வாட்ஸ்அப் போன்ற ஊடகங்கள் மூலம் தேவையுள்ளவர்களுக்கு மட்டும் அனுப்பவும் முயற்சிக்கிறோம். எனவே, உற்சாகமாய் **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைகளை வாசிப்பவர்களுக்கு மட்டும் எப்படியாவது மாதந்தோறும் அனுப்ப வேண்டும் என்பது எங்களுடைய விருப்பம். **அழைப்பின் எதிரொலி** பத்திரிகையை வலைதளத்திலும், இ-மெயில், வாட்ஸ்அப் போன்ற சமூக ஊடகங்களிலும்கூட தொடர்ந்து பிரசுரிக்கத் திட்டமிட்டுள்ளோம். எனவே, முன் எச்சரிக்கையாக கீழ்க்காணும் உங்கள் விவரங்களை எங்களுக்கு உடனடியாக தபால், கொரியர், வாட்ஸ் அப், இ-மெயில், தொலைபேசி போன்ற ஏதாவது வழியில் எங்களுக்குத் தெரிவித்து எங்களுடன் உள்ள உங்கள் உறவை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்:

1. உங்கள் சரியான முகவரி
2. உங்கள் சரியான தொலைபேசி மற்றும் வாட்ஸ்அப் எண்கள்
3. உங்கள் இ.மெயில் முகவரி (இருந்தால் மட்டும்)

இவற்றை எங்களுக்கு அனுப்புங்கள். அனுப்பாவிட்டால் **அழைப்பின் எதிரொலி** ஊழியத்தின் வெளியீடுகளை வருங்காலங்களில் நீங்கள் பெறமுடியாது. **அழைப்பின் எதிரொலி ஊழியங்களுடன் தொடர்ந்து உறவில் இருப்பவர்களுக்கு இது பொருந்தாது.** உங்கள் தொடர்ந்த உறவினை நாங்கள் மதித்து பராமரிக்க மிகவும் ஆவலாயிருக்கிறோம்.

கீழ்க்காணும் **அழைப்பின் எதிரொலி** ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்.

1. **அகில உலக யோசுவா செயல்வீரர்கள்** நிர்வாகம்
2. தினமும் இரவு 10 மணிக்கு உலகத்தில் உள்ள எல்லா இளம் ஆண்களையும், இளம் பெண்களையும், குழந்தைகளையும் தேவன் நினைத்தருள ஒரு நிமிட ஜெபம்.
3. உலக சபைகளுக்காகவும், மக்களுக்காகவும் ஒருமணிரேம் ஜெபிக்கிற சங்கிலி ஜெபம்.
4. நாம் நடத்தும் கருத்தரங்குகள், முகாம்கள், நடைமுறைப் பயிற்சிகள்

நம் ஊழியங்களில் உலக அளவில் ஏராளம் பங்காளர்களும், ஊழியர்களும் செயல்படுகின்றனர். நீங்களும் எங்களுடன் இணைந்து நம் தேவனுக்காக ஏதாவது செய்ய முன்வாருங்கள்.

இந்த மே மாதத்தில் எல்லா சபைகளின் சார்பிலும், நம் ஊழியங்களின் சார்பிலும் நடைபெறும் **வேனிற்கால விடுமுறைப் பள்ளி (Vacation Bible School)** ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்.

சென்னையில் உள்ள நமது வேனிற்கால விடுமுறைப் பள்ளிகள்:

1. சந்தோஷபுரம் ஏப்ரல் 25 முதல் மே 1 வரை
2. சென்னை வேளச்சேரி ஏப்ரல் 30 முதல் மே 5 வரை
3. சென்னை பாலாஜிநகர், பள்ளிக்கரணை ஏப்ரல் 30 முதல் மே 5 வரை
4. சென்னை சேப்பாக்கம் மே 6 முதல் மே 12 வரை.

சகோதர, சகோதரிகளே, எங்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள்.

**கர்த்தரின் ஊழியத்தில்,**

**அழைப்பின் எதிரொலி ஊழியக் குழுவினர்.**

E.mail : sam@echoofhiscall.org

## அழைப்பின் எதிரொலி யூடியூப் சானல்!

*நமது **அழைப்பின் எதிரொலி ஊழியத்தின்** 5 நிமிட தேவ செய்திகளும், ஜெபங்களும் தினமும் காலை 2.00 மணி முதல் தமிழ், தெலுங்கு, இந்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில்* **Echo of His Call YouTube** *சானலில் ஒளிபரப்பாகிக் கொண்டிருக்கின்றன. இதைப் பார்ப்பதன் மூலம் கர்த்தரின் கிருபையைப் பெறலாம்.*

*மேலும், (+91) 98410 71858 மற்றும் (+91) 98412 71858 ஆகிய எங்களுடைய தனிப்பட்ட* (Personal) *இரு செல்போன் எண்களையும் தங்கள் செல்போன்களில் பதிவு செய்து கொள்ளுங்கள்.*

**– போதகர் எஸ். சாம் செல்வ ராஜ்**


## உடனடி தேவை

### ஆசிரியர்கள்

**செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி**

**An *Echo of His Call* Institution**

**விஜயநகரம், மேடவாக்கம், சென்னை – 100.**

சிறந்த கல்வித் தகுதி, அனுபவம், அர்ப்பணிப்பு மற்றும் ஊழிய நோக்குடன் பணிபுரியும் கிறிஸ்தவர்கள் தேவை.

*சுய விவரங்களுடன் விண்ணப்பிக்கவும்.*

E.mail: sam@echoofhiscall.org

WhatsApp: (+91) 98412 71858


## மிக அவசர செய்தி!




நமது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைகளை தபால் மூலம் அனுப்புவதில் சில தவிர்க்க முடியாத தடைகள் வெகு சீக்கிரத்தில் ஏற்பட வாய்ப்பு உள்ளது. எனவே, நமது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகையைத் தொடர்ந்து பெற விரும்புகிறவர்கள் உங்கள் பெயர்களையும், முகவரிகளையும், இ.மெயில் (மின்னஞ்சல்) முகவரிகளையும், வாட்ஸ்அப் எண்களையும் கடிதம் மூலமோ, இ.மெயில்(மின்னஞ்சல்) மூலமோ, தொலைபேசி மூலமோ, வாட்ஸ்அப் மூலமோ குறுஞ்செய்தி மூலமோ எங்களுக்கு உடனே அனுப்புங்கள்.

தொடர்ந்து உங்களுக்கு ஊழியம் செய்ய எங்களுக்கு உதவுங்கள்!


**எங்கள் முகவரி:**

**ECHO OF HIS CALL,**

10, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005, India

Cell: (+91) 98412 71858 / 98410 71858 E.mail: sam@echoofhiscall.org

... 1-ம் பக்கத் தொடர்ச்சி

## 99 ஆடுகளின் மேல் மேய்ப்பனுக்கிருந்த நம்பிக்கை!



கொள்கிறேன். ஆனாலும், தொண்ணூற்றொன்பது ஆடுகளை ஏன் அந்த மேய்ப்பன் விட்டுச் சென்றார் என்று நீங்கள் எப்போதாவது யோசித்திருக்கிறீர்களா? தொண்ணூற்றொன்பது ஆடுகள், ஒன்பது காசுகள் மற்றும் மூத்த சகோதரர்; இதைத்தான் நான் 99:9:1 என்று நான் குறிப்பிடுகிறேன்.

இதுபோன்றதொரு சூழ்நிலையில் நீங்கள் இருந்தால், தொண்ணூற்றொன்பதையும் விட்டு, காணாமற்போன ஒன்றைத் தேடிச் செல்லுவீர்களா? இங்கு அந்த மேய்ப்பன் அவற்றை விட்டுச் சென்றது மட்டுமல்லாமல், அவற்றை வனாந்தரத்திலும் விட்டுச் சென்றதுதான் என்னை இன்னும் ஆழ்ந்து சிந்திக்க வைத்தது. அது ஒரு பாதுகாப்பான இடம் அல்ல. அவர் அவற்றை ஒரு தொழுவத்திலோ அல்லது பாதுகாப்பான அடைப்பிலோ விடவில்லை. அவை திறந்தவெளியில், காட்டு விலங்குகளாலும் பிற ஆபத்துகளாலும் சூழப்பட்டிருந்தன. ஒன்றைத் தேடும்போது அவர் தொண்ணூற்றொன்பதையும் இழந்திருக்கலாம்.

ஒருவேளை காணாமற்போன அந்த ஆடு இளமையாகவோ, ஆர்வமாகவோ அல்லது புதியவைகளை ஆராயச் சென்ற ஆர்வத்தில் அப்படியே தொலைந்து போயிருக்கலாம் அல்லது ஒருவேளை அது முரட்டாட்டமுடையதாகவும், கீழ்ப்படியாததாகவும், எப்போதும் அலைந்து திரிந்து, மேய்ப்பனின் வழிகாட்டுதலைப் புறக்கணித்து இருக்கலாம். இப்படி நான் நினைப்பதை போல் வேறு யாராவது இதைப் பற்றி யோசித்திருக்கிறார்களா என்று எனக்குத் தெரியவில்லை. காரணம் எதுவாக இருந்தாலும், மேய்ப்பன் தொண்ணூற்றொன்பதையும் வனாந்தரத்தில் பாதுகாப்பின்றி விட்டுவிட்டு, காணாமற்போன ஒன்றைப் பின்தொடரத் தயாராக இருந்தார். இந்த எண்ணம் நீண்டகாலமாக என் மனதில் இருந்து வருகிறது. அவர் அதைத் தேடிச் சென்றதற்கு ஒரு காரணம் இருக்க வேண்டும்.

### 1. ஒற்றுமையின் வலிமை!

அந்த 99 ஆடுகளையும் திறந்த வெளி வனாந்தரத்தில் விட்டுச் சென்றதில் மேய்ப்பனுக்கு அவைகளின் மீது மிகுந்த நம்பிக்கை இருந்திருக்க வேண்டும். அவர்



ஒற்றுமையின் வலிமை!

கள் ஒருவருக்கொருவர் சார்ந்திருப்பதையும், ஒற்றுமையாக ஒன்றாக நின்று, எல்லா நேரங்களிலும் ஒருவரையொருவர் ஆதரித்து வாழ உறுதியாக உள்ளதையும், ஆபத்தை எதிர்கொண்டாலும், அவை ஒரு வலிமையான சக்தியாக ஒன்றுபட முடியும் என்பதையும் அவர் அறிந்திருக்கலாம்.

மேய்ப்பன் அவற்றை ஒற்றுமையின் சக்தியில் நன்கு பயிற்றுவித்திருப்பார். ஆகையால், ஒரு ஆடு தாக்கப்பட்டால், மற்ற 98 ஆடுகள் உடனே அதன் உதவிக்கு விரைந்து சென்று பாதுகாக்கும், அவற்றின் பாதுகாப்பு அசைக்க முடியாதது; ஒற்றுமையில் மிகுந்த பலம் உள்ளது என அவைகள் அறிந்திருந்தன.

காணாமற்போன ஆடு முற்றிலும் தனியாக, பாதுகாக்கவோ ஆதரிக்கவோ யாரும் இல்லாமல் இருந்தது. வெளிப்புற அச்சுறுத்தல்கள் மட்டுமல்ல, தனிமையின் காரணமாக அது உயிர்வாழ்வதற்கான வாய்ப்புகள் மிகவும் குறைவு என்பதையும் மேய்ப்பன் புரிந்து கொண்டான். தனியாக இருப்பது ஒரு ஆபத்து. அதனால்தான் ஒன்றாக இருக்க பைபிள் நம்மை ஊக்குவிக்கிறது.

தொலைந்துபோன ஆடு எந்தப் பாதுகாப்பும், ஆதரவுமின்றித் தன்னந்தனியாக விடப்பட்டிருக்குமே என்பதையும் மேய்ப்பன் புரிந்து கொண்டான். தனிமையிலும், வெளிப்புற அச்சுறுத்தல்களாலும் அது உயிர் வாழ்வதற்கான வாய்ப்புகள் மிகக்குறைவு. தனியாக இருப்பது ஒரு ஆபத்தான இடம். அதனால் தான் பைபிள் நம்மை ஒன்றாக இருக்க ஊக்குவிக்கிறது. **அல்லாமலும், உங்களில் இரண்டு பேர் தாங்கள் வேண்டிக்கொள்ளப் போகிற எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால், பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில், இரண்டு பேராவது, மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார்.** (மத்தேயு 18:19, 20),

**இதோ, சகோதரர், ஒருமித்து வாசம் பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது?** சங்கீதம் 133:1.

சிலவேளை, நம் மதிப்புகளைப் பகிர்ந்து கொள்ளாத, நம்மை உண்மையாக நேசிக்காதவர்களுடன் இருப்பதைவிட தனியாக இருப்பது நல்லது என்று நாம் உணரலாம். நமக்கு நெருக்கமானவர்கள் நம்மைக் காட்டிக்கொடுக்கும்போது அல்லது காயப்படுத்தும்போது அது மிகவும் வேதனையாக இருக்கும். இதனால் மீண்டும் எவரையும் நம்புவது நமக்குக் கடினமாக உள்ளது.

அன்புள்ள சகோதர, சகோதரிகளே, நீங்கள் இதை அனுபவித்திருந்தாலோ அல்லது இப்போது அதை அனுபவித்துக் கொண்டிருந்தாலோ, கர்த்தர் உங்கள்

தொடர்ச்சி 6-ம் பக்கம்.....

நெகேமியா வேதாகமக் கல்லூரிகள்
சேப்பாக்கம் & சந்தோஷபுரம், வேளச்சேரி – சென்னை
கல்வித்தகுதி : 10–ம் வகுப்பு மற்றும் அதற்கு மேல்
ECHO OF HIS CALL 1966-2016 REACHING NATIONS
Diploma in Theology
போதனா மொழி : தமிழ் (பகுதி நேரம்) மாலை நேர வகுப்பு
போதனா மொழி : இந்தி (முழு நேரம் (Residential)) (தங்கிப் படிப்பவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்படும்.)
உடனே அணுகவும் !
உலகத்தின் தலைசிறந்த கிறிஸ்தவ தலைவர்கள் மற்றும் போதகர்களின் நன்மதிப்பைப் பெற்ற 55 வருட அனுபவ ஸ்தாபனம்.
தொடர்புக்கு : தலைவர், நெகேமியா வேதாகமக் கல்லூரி,
10, முகமது அப்துல்லா 2–வது தெரு, பெல்ஸ் ரோடு, சேப்பாக்கம், சென்னை – 600 005.
தொலைபேசி: (+91–44) 2852 8282, கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின்னஞ்சல் : sam@echoofhiscall.org /இணையதளம் : www.echoofhiscall.org

# பிரதானக் கட்டளைப் பங்காளர்

GREAT COMMISSION PARTNERS ECHO OF HIS CALL MINISTRIES SINCE 1969

## GREAT COMMISSION PARTNERS - PRAISE & PRAYER POINTS

**பகிர்தல்** (Share) (கலாத்தியர் 6:2), **உதவி செய்தல்** (Support) (ரோமர் 12:13) மற்றும் **துரிதப்படுத்துதல்** (Speed up) (II தீமோத்தேயு 1:6)

**துதி மற்றும் ஜெப குறிப்புகள் - 2025 மே 19 முதல் ஜூன் 18 வரை**

(இப்பகுதியைப் பிரித்தெடுத்து, மடித்து, உங்கள் வேதாகமத்தினுள் வைத்து தொடர்ந்து ஜெபியுங்கள்)

## தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்

மே 19 ⇨ நமது **வேனிற்கால விடுமுறை வேதாகமப் பள்ளிகளின்**மேல் கர்த்தர் பொழிந்த அபரிமிதமான ஆசீர்வாதங்களுக்காக...

மே 20 ⇨ நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி, நெகேமியா வேதாகமக்கல்லூரி** மற்றும் **அஞ்சல்வழி வேதாகமக்கல்வி** மூலமாக ஏழை, எளிய மாணவர்கள் பயனடைந்து வருவதற்காக...

மே 21 ⇨ நமது மொழிப்பெயர்ப்பாளர்கள், இணை ஆசிரியர்கள், உதவியாளர்கள் மற்றும் அவர்களுடைய குடும்பத்தினர்களை ஆசீர்வதித்து வருகிறதற்காக...

மே 22 ⇨ நமது தலைமைச் சபை மற்றும் கிளைச் சபை உறுப்பினர்களை ஆசீர்வதித்து வருவதற்காக...

மே 23 ⇨ அரசியல் மற்றும் மத எதிர்ப்புகள் மத்தியிலும் நமது கிறிஸ்தவ ஊழியங்களை வெற்றிகரமாக நடத்தி வரும் கிருபைக்காக ...

மே 24 ⇨ அனைத்து நாடுகளின் மத்தியிலும் நிலவிவரும் போர் பீதி மற்றும் குழப்பங்கள் மத்தியில் தேவ பாதுகாப்பு கொடுத்து வரும் கிருபைக்காக...

மே 25 ⇨ நமது ஜெபப் பங்காளர்கள், சந்தாதாரப் பங்காளர்கள், விசுவாசப் பங்காளர்கள், ஆயுள் பங்காளர்கள், பிரதானக் கட்டளைப் பங்காளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரை ஆசீர்வதித்து வருவதற்காக ...

மே 26 ⇨ **யூடியூப் 5 நிமிட செய்திகள் மற்றும் ஜெபம்** மூலம் அதிகரித்து வரும் Subscribers மற்றும் சாட்சிகளுக்காக...

மே 27 ⇨ நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி** வளாகத்தில் நடைப்பெற்ற விடுதலைப் பெருவிழா கூட்டத்தை ஆசீர்வதித்த கிருபைக்காக...

மே 28 ⇨ நமது **அஞ்சல்வழி இறையியல் கல்வி** மற்றும் **வேதாகம கல்வி முறைகளின்** வளர்ச்சிகளுக்காக ...

மே 29 ⇨ நமது அனைத்து ஊழியங்களின் தேவைகளையும் அற்புதமாக சந்தித்த கிருபைக்காக...

மே 30 ⇨ சமூகத்தின் அனைத்து துறைகளிலும் பெண்களை உயர்த்திய கிருபைக்காக...

மே 31 ⇨ நமது **அழைப்பின் எதிரொலி ஊழியங்களின்** பணியாளர்களையும், அவர்களது குடும்பத்தினரையும் பாதுகாத்து வரும் கிருபைக்காக...

ஜூன் 01 ⇨ 2025–26ம் கல்வி ஆண்டிற்கான நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி** மற்றும் **நெகேமியா வேதாகமக் கல்லூரிகளின்** தகுதியான மாணவர்களின் சேர்க்கையை வெற்றிகரமாக்கியதற்காக ...

ஜூன் 02 ⇨ வேதாகம கருத்தரங்குகளை தொடர்ந்து நடத்தி வருவதற்காக...

ஜூன் 03 ⇨ **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை ஊழியத்தினை 1969 முதல் இன்றுவரை ஆசீர்வதித்ததற்காக...

## தேவனிடத்தில் ஜெபியுங்கள்

ஜூன் 04 ⇨ உலக நாடுகளிடையே சமாதானம் நிலவி பொருளாதார மேம்பாடு அடைவதற்காக...

ஜூன் 05 ⇨ நமது **அழைப்பின் எதிரொலி ஊழியங்களின்** எல்லாவிதமான வழிகள் மற்றும் செயல்பாடுகளின் விஸ்தீரணத்திற்காக ...

ஜூன் 06 ⇨ கிறிஸ்தவர்கள் கர்த்தரின் வேத வசனத்தை பின்பற்றி, கிறிஸ்துவின் சாயலை அடைவதற்காக...

ஜூன் 07 ⇨ உலகத்திலுள்ள கிறிஸ்தவ கல்வி நிறுவனங்கள் நற்கீர்த்தியுடன் என்றென்றும் நிலைத்திருக்க...

ஜூன் 08 ⇨ நமது ஜெப ஊழியத்தில் உதவி செய்பவர்களுக்காகவும், நண்பர்கள் மற்றும் நலம் விரும்பிகள் அனைவருக்காகவும் ...

ஜூன் 09 ⇨ ஆண்டவரது இராஜ்யம் பூமியில் நிலைப்பட மேலும் கூடுதலான தரிசனங்களை நம்மிடத்தில் அருளவேண்டி ...

ஜூன் 10 ⇨ கிறிஸ்தவ ஆலயங்களுக்கு எதிரான தீயசக்திகளிடமிருந்து தேவ பாதுகாப்பு கிடைப்பதற்காக...

ஜூன் 11 ⇨ அனைத்து குடும்பங்களிலும் சமாதானம் நிலவ...

ஜூன் 12 ⇨ உலகளவில் தொலைக்காட்சி மற்றும் யூடியூபில் பிரசங்கிக்கும் ஊழியர்களுக்கான அபிஷேகம் மற்றும் வழிநடத்துதலை வேண்டி ...

ஜூன் 13 ⇨ நமது தலைமைப் போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் உடல்நலம், தேவ பாதுகாப்பை வேண்டி ...

ஜூன் 14 ⇨ சகலவிதமான நிலைகளிலும் மற்றும் திட்டமிடுதலிலும் உலக நாடுகள் ஒற்றுமையுடனும், முன்னேற்றத்துடனும் காணப்பட....

ஜூன் 15 ⇨ நமது ஜெபப் பங்காளர்கள், சந்தாதாரப் பங்காளர்கள், விசுவாசப் பங்காளர்கள், ஆயுள் பங்காளர்கள், பிரதானக் கட்டளைப் பங்காளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் நலன்களுக்காக...

ஜூன் 16 ⇨ நமது ஊழியர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் ஆரோக்கியம் மேம்பட வேண்டி ...

ஜூன் 17 ⇨ உலகத்தில் உள்ள ஜனாதிபதிகள், பிரதம மந்திரிகள் மற்றும் அரசு அதிகாரிகளுக்காக...

ஜூன் 18 ⇨ வைரஸ் காய்ச்சல் மற்றும் தொற்று நோய்களுக்கு எதிராக பாதுகாப்பை வேண்டி ...

... 4-ம் பக்கத் தொடர்ச்சி


காயங்களைக் குணப்படுத்த வேண்டும் என்று நான் பிரார்த்திக்கிறேன். இயேசு கிறிஸ்து சிலுவைக்குச் செல்லும் வழியில் துரோகத்தைச் சகித்தார். எனவே அவர் உங்கள் வேதனை, தயக்கம் மற்றும் சந்தேகங்களைப் புரிந்து கொள்கிறார்.

ஆம், இந்த உலகில் மக்களை நம்புவது கடினமாக இருக்கலாம். துரதிருஷ்டவசமாக, பலர் தேவாலயத்திற்குச் செல்லத் தயங்குவதற்கு இதுவே ஒரு காரணம். ஒரு சிலரால் நீங்கள் இடறலடைந்து தேவாலயத்தைத் தவிர்க்கிறீர்கள் என்றால், அதையெல்லாம் கண்டுகொள்ளாமல் தயவுசெய்து சபை கூடிவருதலை விட்டுவிடாதீர்கள் என்று நான் உங்களை ஊக்குவிக்க விரும்புகிறேன். இது வெறும் ஆலோசனை மட்டுமல்ல, கர்த்தரிடமிருந்து வந்த கட்டளையுமாகும்.

**சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம்.; நாளானது சமீபித்துவருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்தி சொல்ல வேண்டும்.**

எபிரெயர் 10:25.

திருச்சபையிலிருந்து உங்களைத் தூர விலக்கிக் கொள்ளாதீர்கள். மாம்ச உலகில் மாம்ச இச்சையுடைய மக்களிடையே நாம் வாழ்கிறோம் என்பதை நினைவில் கொள்ளுங்கள். ஆனால் பரிசுத்த ஆவியான தேவன் நமக்கு அன்பு செலுத்துவதற்கான கிருபையையும், பகுத்தறிவதற்கான ஞானத்தையும் தருகிறார். அப்போஸ்தலர் 12ம் அதிகாரத்தில் திருச்சபை ஒன்றாகக்கூடி



**பேதுருவுக்கு தேவன் அற்புதமாக சிறைக்கதவுகளைத் திறந்தார்**

ஜெபித்தபோது, பேதுருவுக்கு தேவன் அற்புதமாக சிறைக்கதவுகளைத் திறந்தார். விசுவாசிகள், சபையில் ஒன்றுகூடி ஜெபிக்கும்போதும், தேவனின் பெரிதான வல்லமை வெளிப்படுகிறது.

அன்பு சகலத்தையும் மூடும். நமக்கு ஒருவருக்கொருவர் தேவை. ஆங்கிலத்தில் ஒரு அழகான பழமொழி உண்டு: "நீங்கள் வேகமாக நடக்க விரும்பினால், தனியாக நடந்து செல்லுங்கள். ஆனால் நீங்கள் வெகுதூரம் நடக்க விரும்பினால், ஒருவருடன் நடந்து செல்லுங்கள்." இருப்பினும், நீங்கள் அவ்வாறு நடக்கவும் ஐக்கியங் கொள்ளவும் யாரைத் தேர்வு செய்கிறீர்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள். ஏனென்றால், அவர்களது தாக்கம் உங்களைப் பாதிக்கும். இதனால் தான் முதலாம் சங்கீதத்தில் நாம் செழிக்க சில தொடர்புகளைத் தவிர்க்க வேண்டுமென வேதம் நமக்குக் கற்பிக்கிறது. ஒற்றுமை அவசியம், ஆனால் தவறான சகவாசம் பேரழிவிற்கு வழிவகுக்கும்.

**"நாம் ஒன்றாயிருக்கிறதுபோல அவர்களும் ஒன்றாயிருக்கும்படி, ... ஒருமைப்பாட்டில் அவர்கள் தேறினவர்களாயிருக்கும்படிக்கும், என்னை நீர் அனுப்பினதையும், நீர் என்னில் அன்பாயிருக்கிறதுபோல அவர்களிலும் அன்பாயிருக்கிறதையும் உலகம் அறியும்படிக்கும், நான் அவர்களிலும் நீர் என்னிலும் இருக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்."** என்று இயேசு ஒரு ஆழமான ஜெபத்தை ஏறெடுத்தார். யோவான் 17:22-23

காணாமல் போன ஒரு ஆட்டை மேய்ப்பன் தேடிச் செல்வது தேவனுடைய அளவற்ற இரக்கத்திற்கு எடுத்துக்காட்டு. எனினும் மீதம் தொண்ணூற்றொன்பது ஆடுகள் என்பது அவருடைய மீட்பில் திருப்தி கொண்ட ஒரு பெரிய சமூகத்தைக் குறிக்கிறது. காணாமல்போன ஒருவர் திரும்பிவரும்போது, மீட்கப்பட்டவர்களுக்கு மட்டுமல்ல, முழு மந்தைக்கும் மகிழ்ச்சி உண்டாகிறது. ஒவ்வொரு தனிநபரையும் தேவன் மதிக்கிறார் என்பதையும், மீட்பு என்பது அனைவரும் கொண்டாட வேண்டியதொரு சமூக நிகழ்வு – மற்றவர்களை மீண்டும் மந்தைக்குள் கொண்டுவருவதில் பங்கேற்கவும் இது ஒரு அழைப்பு என்பதையும் இது நமக்குக் கற்பிக்கிறது.

## 2. விழிப்புணர்வு மற்றும் மறுசீரமைப்புக்கான அழைப்பு!

மந்தைக்குள் உள்ள மற்ற தொண்ணூற்றொன்பது ஆடுகளும் விழிப்புடனிருக்க வேண்டும் என்று மேய்ப்பன் எதிர்பார்க்கிறார். யாராவது விலகிச் செல்ல தொடங்கும்போதே முதலில் கவனித்து, அந்த நபரை மந்தைக்குள் தக்க வைத்துக் கொள்ள வேண்டும். அந்த தொண்ணூற்றொன்பது ஆடுகளும் அப்படிப்பட்ட ஒரு பெரிய பொறுப்புடையவைகளாகும் – இல்லையெனில் ஒருவர் காணவில்லை என்பது மேய்ப்பனுக்கு எப்படித் தெரியும்? நிச்சயமாக, அவர்களில் குறைந்தபட்சம் ஒருவராவது எச்சரிக்கை எழுப்பியிருப்பார்கள். ஒருவேளை அது தொலைந்து போனவரின் நெருங்கிய உறவினராகவோ, குடும்பத்தாராகவோ இருக்கலாம். அது ஒரு வயதான ஆடு என்றால், ஒருவேளை இளையவர்கள் கவனித்து மேய்ப்பருக்குத் தெரிவித்திருப்பார்கள்.

மீதமுள்ள தொண்ணூற்றொன்பது பேரும் விழிப்புடன் இருக்க வேண்டும் என்று இயேசு கிறிஸ்து எதிர்பார்க்கிறார். தொண்ணூற்றொன்பது பேரில் ஒருவராக நீங்கள் உங்களைக் கருதினால், தொலைந்து போனவர்களிடம் உங்களுக்கு ஒரு பொறுப்பு இருக்கிறது. நமது குடும்ப உறுப்பினர்கள், நண்பர்கள் மற்றும் எல்லாவற்றிற்கும் மேலாக, நமது திருச்சபை சமூகத்திடம் கவனத்துடன் இருக்க வேண்டும். பெரும்பாலும், நம்மைச் சுற்றியுள்ளவர்கள் தங்கள் விசுவாசத்தில் பாதுகாப்பாக இருக்கிறார்கள் என்று நாம் கருதுகிறோம், ஆனால் தொண்ணூற்றொன்பது பேரில்கூட, சிலர் அலைந்து திரிகிறவர்கள் உள்ளனரே. விழிப்புடன் இருங்கள்!

**எதிரி நெருங்கி வருவதை ஜாமக்காரன் காணும்போது, மக்களை எச்சரிக்கை அபாய மணியை ஒலிக்கிறான்** (எசேக்கியேல் 33:3-9). அதேபோல், தொண்ணூற்றொன்பது பேரின் அர்ப்பணிப்பு ஆவிக்குரிய மெத்தனத்தைத் தடுக்க உதவுகிறது மற்றும் சமூகத்தின் ஒட்டுமொத்த ஆரோக்கியத்தைப் பலப்படுத்துகிறது. தேவன் நம்மை வைத்த இடங்களில் நம்மை ஜாமக்காரர்களாக நிலைநிறுத்தியுள்ளார். நாம் விழிப்புடன் இருப்போம்!

தொடர்ச்சி 9-ம் பக்கம்.....

### வருமான வரி விலக்கு

இந்திய வருமான வரிச்சட்டம் பிரிவு 80G–கீழ் ஏழை, எளியோருக்கு மருத்துவம் மற்றும் சமுதாய முன்னேற்றத்திற்கான உதவி செய்வதற்காக "அழைப்பின் எதிரொலி" அறக்கட்டளைக்குத் தனிநபர் மற்றும் ஸ்தாபனங்கள் தரும் நன்கொடைகள் வருமான வரிச்சட்டப் பிரிவு 80G–யின் கீழ் வரிவிலக்குப் பெறத் தகுதியுடையவை. வருமான வரிக் கணக்குகளுக்கான அலுவலக இரசீது நம் அலுவலகத்திலிருந்து வழங்கப்படும். அப்படிப்பட்ட நன்கொடைகளுக்கான பணவிடைத்தாள்களை (Demand Drafts) "Echo of His Call Educational Trust" என்ற பெயருக்கு எடுத்து அனுப்பும்போது **ஆதார் மற்றும் பான் (PAN) நம்பர்களை தெரியப்படுத்தி வருமானவரி விலக்கு பெறுங்கள்.** மேலும் விபரம் வேண்டுவோர் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

| | |
|---|---|
| **Account Name** | **: ECHO OF HIS CALL EDUCATIONAL TRUST** |
| **Account Number** | **: 1023 2923 805** |
| **Bank Name** | **: STATE BANK OF INDIA** |
| **Branch** | **: TRIPLICANE, CHENNAI - 600 005** |
| **IFSC Code** | **: SBIN 0000249** |
| **SWIFT Code** | **: SBI NIN BB 455** |

## நமது தலைமையக ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்!

1. ஜெப உதவி – 24 மணி நேரம்
2. அழைப்பின் எதிரொலி – பத்திரிகைகள் (16 மொழிகள்)
   தமிழ், ஆங்கிலம், மலையாளம், தெலுங்கு, இந்தி, கன்னடம், மராத்தி, பெங்காளி, குஜராத்தி, ஒடியா, நேப்பாளி, அஸாமி, பஞ்சாபி, உருது, சிங்களம், ஆப்ரிகான்ஸ்.
3. வேதாகமக் கடித முறைக் கல்வி – தமிழ், ஆங்கிலம், இந்தி
4. அஞ்சல் வழி இறையியல் கல்வி (தமிழ் மற்றும் ஆங்கிலம்)
5. நெகேமியா வேதாகமக் கல்லூரிகள் – (சேப்பாக்கம், வேளச்சேரி & சந்தோஷபுரம்)
6. பிரதானக் கட்டளைப் பங்காளர்கள் (ஊழியர் ஐக்கியம்)
7. பயிற்சி வகுப்புகள் – கருத்தரங்குகள்
8. சுவிசேஷக் கூட்டங்கள்
9. கைப்பிரதி வினியோகம் – தொடர் ஊழியம்
10. சுவிசேஷ அச்சகம் – சுவிசேஷ பிரசுரங்கள்
11. St. பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி – கிராம ஆங்கிலப் பள்ளி
12. சிறுவர் வேத பாடசாலை (சேப்பாக்கம்) – ஞாயிறு காலை 10.30 மணி
    & (வேளச்சேரி, பாலாஜி நகர் & சந்தோஷபுரம்) மாலை 3.00 மணி
13. அதிகாலை ஆராதனை – ஞாயிறு காலை 5.30 மணி
14. ஆயத்தக் கூட்டம் – ஞாயிறு காலை 8.00 மணி
15. தமிழ் ஆரதனைகள் – ஞாயிறு காலை 8.30 மணி
16. வாலிபர் கூட்டம் – ஞாயிறு காலை 11.00 மணி
17. ஐக்கிய உணவு – ஞாயிறு மதியம் 1.00 மணி
18. இந்தி ஆராதனை – ஞாயிறு மாலை 4.00 மணி
19. தெலுங்கு ஆராதனை – ஞாயிறு மாலை 5.00 மணி
20. ஆங்கிலம் – இந்தி ஆராதனை – ஞாயிறு மாலை 6.00 மணி
21. கருத்து நேரம் – ஞாயிறு இரவு 7.00 மணி
22. பெண்கள் ஆராதனை – புதன் மாலை 5.30 மணி
23. ஆண்கள் ஆராதனை – வெள்ளி இரவு 7.00 மணி
24. சீஷத்துவக் கூட்டம் – சனி மாலை 6.00 மணி
25. வீட்டுக் கூட்டங்கள் – செவ்வாய், வியாழன் மாலை 6.30 மணி
26. விசேஷ திருவிருந்து – பிரதி மாதம் முதல் நாள் காலை 6.00 மணி
27. ஊழியர்கள் கூடுகை – முதல் சனிக்கிழமை மாலை 6.00 மணி
28. பெற்றோர் ஜெபம் – முதல் ஞாயிறு மாலை 4.00 மணி
29. இரவு ஜெபம் – 3–ம் வெள்ளி இரவு 9.30 மணி
30. உபவாச ஜெபம் – இரண்டாம் சனிக்கிழமை காலை 9.30 மணி
31. திருவிருந்து – 2–ம் ஞாயிறு ஆராதனைகள்
32. வாலிபர் / சிறுவருக்கான ஜெபம் – தினமும் இரவு 10.00 மணி (தொலைபேசி மூலம்)
33. பணியாளர் ஜெபம் – தினமும் காலை 9.00 மணி
34. அலுவலகம் – தினமும் காலை 9.00 முதல் இரவு 9.00 வரை (ஞாயிறு தவிர)

## அழைப்பின் எதிரொலி தபால் வழிக் கல்வி

### இந்திய மாணாக்கர்களுக்கு

### I. வேதாகமத் தபால் கல்வி

தபால் மூலம் வேதத்தின் உண்மைகளையும், தமிழ், ஆங்கிலம், இந்தி மொழிகளில் கற்க ஓர் அரிய வாய்ப்பு. வயது வரம்பு இல்லை. கல்வித் தகுதி தேவையில்லை. கட்டாயக் கட்டணம் எதுவும் இல்லை.



"புதுவாழ்வு – உமக்கு" என்ற நல்ல புத்தகத்தையும் பெற்றுக் கொள்ளலாம். இப்புத்தகம் ஆங்கிலம் – 54 பக்கங்கள், இந்தி – 76 பக்கங்கள், தமிழ் – 96 பக்கங்கள் கொண்டது. சான்றிதழ் வழங்கப்படும்.

– ஆசிரியர்

### II. அஞ்சல் வழி இறையியல் கல்வி




ஆழமான ஆவிக்குரிய சத்தியங்களை 149 தொகுப்புகள், ஆங்கிலம் – 537 பக்கங்கள் மற்றும் தமிழ் – 652 பக்கங்கள் கொண்ட 7 புத்தக வடிவில் பெற்று முழுவதும் படித்த பின்னர் ஊழிய சான்றிதழ் பெறமுடியும். இதற்கு மொத்த கட்டணம்

**ரூ.1000/– மட்டுமே.**

மேலும் விவரங்களுக்கு :



**தலைவர், நெகேமியா வேதாகமக் கல்லூரி**
10, முகமது அப்துல்லா 2-வது தெரு, சேப்பாக்கம், சென்னை - 600 005.
தொலைபேசி: (+91-44) 2852 8282, 2852 9293, 2854 7766
கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின்அஞ்சல்: biblecor@yahoo.co.in

## அழைப்பின்எதிரொலி பத்திரிகையை

### இலவசமாய்ப் பெற்றிட ஓர் நல்ல வாய்ப்பு

உங்கள் / உறவினர் / நண்பர்கள் முகவரி மற்றும் கைபேசி எண்ணை தபால் / கடிதம் / வாட்ஸ் அப் மூலமாக தெளிவாக **அழைப்பின் எதிரொலி** அலுவலகத்திற்கோ, அலுவலக செல்போனுக்கோ அனுப்பினால் உங்களுக்கு / உறவினர்களுக்கு / நண்பர்களுக்கு இலவசமாக **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை அனுப்பி வைக்கப்படும். தேவனுக்கான இச்சேவை முற்றிலும் இலவசமானது! தேவனின் அருளை பெற வாரீர்!!



# ஆழக்குழியிலிருந்து அரண்மனைக்கு!

# PIT TO PALACE

வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன் (மத்தேயு 24:15)

(போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களின் வாழ்க்கை அனுபவங்கள்)

## விட்டு விடாதே! பின் வாங்காதே!!

**விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான், பின்வாங்கிப் போவானானால் அவன்மேல் என் ஆத்துமா பிரியமாயிராது என்கிறார். நாமோ கெட்டுப்போகப் பின்வாங்குகிறவர்களாயிராமல், ஆத்துமா ஈடேற விசுவாசிக்கிறவர்களாயிருக்கிறோம்.** எபிரெயர் 10:38,39.

எனது ஊழியப்பாதையின் ஆரம்ப நாட்களிலிருந்தே, சரியான மனித உதவி எனக்குக் கிடைக்காததினால் என்னோடு கூட வாழ்ந்தவர்கள் மூலமாகப் பல மிகப்பெரிய போராட்டங்களையும், சொல்ல முடியாத பிரச்சினைகளையும் நான் சந்திக்க வேண்டியிருந்தது. தூங்க முடியாத இரவுகளும், பயத்தோடு கழிந்த நாட்களும் அநேகம். அதனால் கர்த்தர் என்னை உண்மையாகவே அவரது ஊழியத்திற்கு அழைத்தாரா அல்லது நானாகவே இந்த ஊழியத்திற்கு வந்துவிட்டேனா என்ற சந்தேகம் கூட எனக்கு எழும்பினதுண்டு.

ஏனென்றால் பலமுறை நான் பட்டினியிலும், கர்த்தருக்காக எனது சரீரத்தில் அடிகள் வாங்கின சூழ்நிலைகளிலும், தேவனை நோக்கி நான் ஜெபித்தபொழுது, எனக்கு அவர் பதில் தரவில்லை. பல நேரங்களில் அவர் மௌனமாகவே இருந்திருக்கிறார். ஆனால் பிற்காலங்களில், அவரது மௌனம்தான் எனக்குரிய பதில் என்பதைப் புரிந்துகொண்டேன். உலகத்தையும், அதன் மக்களையும் புரிந்து கொள்ளும்படியாகவே அவர் மௌனமாக இருந்துள்ளார். இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை 1979ஆம் ஆண்டு பிரசங்கித்துக் கொண்டிருந்தபொழுது, பயங்கரமான எதிர்ப்பை நான் சந்தித்தேன். ஒரு வாடகைக் கட்டிடத்தில் நான் ஜெபம் நடத்திக் கொண்டிருந்தபொழுது, எனது கட்டிட உரிமையாளரிடம் சென்று சிலர் என்னைக் குறித்துத் தவறாகச் சொல்லிய வார்த்தைகளை அவர் நம்பிவிட்டார். இனி மேல் அங்கு ஜெபம் நடத்தக்கூடாது என்று சொல்லிவிட்டார். நான் எனது வீட்டிற்குள் சென்று கதவுகளை அடைத்துக் கொண்டு, எல்லாத் தண்ணீர்க் குழாய்களையும் திறந்துவிட்டு, கர்த்தருக்கு முன்பாகச் சத்தமாக அழுதேன். எல்லாக் குழாய்களிலிருந்தும் தண்ணீர் பாய்ந்து கொண்டிருந்ததால், நான் சத்தமிட்டு அழுததை பிறர் கேட்கவில்லை.

இருப்பினும், தேவன் எனக்கு எந்த பதிலும் அருளாமல் மௌனமாகவே இருந்தார். அக்காலங்களில் ஒரு பக்கம் எனக்கு நெருக்கங்களும், வேதனைகளும் சூழ்ந்திருந்தன. மறுபக்கம் தேவன் எனக்காக எந்த நன்மையும் செய்யாமல் மௌனமாக இருந்தார். எனக்கு எதிரான மக்கள் தான் மேலும் மேலும் வலுவடைந்து கொண்டு வந்தனர். எனது அரசாங்க அலுவலகத்தில் கூட சிலர் நுழைந்து என்னைக் குறை கூறி என்னைப் பற்றி தவறான காரியங்களை என் உயர் அதிகாரிகளிடம் என் முகத்துக்கு நேராகக் கூறினதுமல்லாமல் என்னைப்பற்றித் தவறானச் செய்திகளைப் பரப்பவும் செய்தார்கள். எனக்கு அவர்களைக் குறித்து எரிச்சலும், பயமும் உண்டானது. எனவே ஒருநாள் இவ்வாறாக ஜெபித்தேன்:

"ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோரின் தேவனே! உம்முடைய மௌனத்தை என்னால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. எனக்காக, கிரியை செய்து என்னைக் காப்பாற்ற உம்மால் முடியவில்லை என்றால், வேறு யாருக்கு நீர் உதவி செய்யப் போகிறீர்? நீர் எனக்குப் பாதுகாப்பும், புகலிடமும் அளிக்கவில்லை என்றால் நான் வேறு எங்கு போவேன்?"

தேவனிடமிருந்து எனக்கு எந்த பதிலோ, வழிநடத்துதலோ அல்லது ஆவியின் ஏவுதலோ இல்லாததால், நான் என் ஆவியில் அதிகமாய்க் கலங்கி, என்னுடைய வீட்டுச் சாமான்கள், ஊழியத்தின் பொருட் கள் அனைத்தையும் எடுத்துக்கொண்டு, ஊழியத்தை விட்டுவிட்டு, என் சொந்த ஊருக்குப் போக ஆயத்தம் செய்து கொண்டிருந்தேன். "கொல்லுகிற பட்டயத்துக்குத் தப்ப அவரவர் தங்கள் ஜனத் தண்டைக்குத் திரும்பிக் கொண்டு, அவரவர் தங்கள் தேசத்துக்கு ஓடிப் போவார்கள்" (எரேமியா 50:16) என்ற வசனத்திற்கேற்ப நானும் அவ்வாறே செய்ய முடிவெடுத்தேன்.

அன்று இரவு 2 மணிக்கு என் வீட்டுக் கதவை யாரோ தட்டும் சத்தம் கேட்டது. என் கைகள் நடுங்கின. எனக்கு உதவி செய்வார் யாருமில்லை. பயந்து கொண்டே கதவைத் திறந்தேன். நரைத்த தாடியுடன் ஒரு வயதான மனிதர், தோளில் ஒரு பையுடனும், கையிலே ஒரு சாப்பாடு பொட்டலத்துடனும் நின்று கொண்டி ருந்தார். "நீங்கள் யார்? இப்பொழுது ஏன் என்னிடம் வந்துள்ளீர்கள்? நான் என் சொந்த ஊருக்குப் போக ஆயத்தமாயிருக்கிறேன்... என் ஜெபங்களுக்கெல்லாம் என் தேவன் பதிலளிக்கவில்லை" என்று அவரிடம் கூறினேன்.

அவரை என் வீட்டிற்குள் வர அனுமதிக்குமாறு அவர் கெஞ்சினார். அது நடு இரவானபடியால், நான் மறுத்து சத்தமிட்டால், அயலகத்தார் தவறாக நினைத்து விடுவார்கள் என்று கூறி அவர் என்னைச் சமாதானப்படுத்தினார். வேறு வழியின்றி அவரை உள்ளே அனுமதித்தேன். அவர் என்னைப் பார்த்து இவ்வாறாகப் பேசினார்:

"எனது அருமை மகன் சாம், என் பெயர் பாஸ்டர் ஜே. எஸ். டேனியேல். பல வருடங்கள் நாம் ஒருவரையொருவர் சந்திக்காததால், நீ என்னை மறந்துவிட்டாய். இன்று இந்த நகரத்திலே எனது ஊழி யத்தை முடித்துவிட்டு என் கிராமத்திற்குத் திரும்பிப் போகப் புறப்பட்டேன். ஆனால் கடைசி பஸ் போய்விட்டது. வாடகைக் கார் வைத்துப்போக என்னிடம் பணம் இல்லை. நான் இந்த இரவு படுத்துக் கொள்ளவும் எந்த இடமும் தெரியாது. நான் சென்னை மவுண்ட்ரோட்டில் (Mount Road) நடந்து போய்க் கொண்டிருந்தபோது தேவன் உன்னைப்பற்றி என்னிடம் திட்டவட்டமாய்ப் பேசி உன்னை இன்று இரவு வந்து காணும் படிச் சொன்னார். இந்தச் சென்னைப் பட்டணத்தில் உனக்காகக் கட்டிடங்களையும், அச்சகங்களையும், வாகனங்களையும் ஆண்டவர் தயார் நிலையில் வைத்துள்ளார். நீ இந்த ஊரை விட்டுப் போகக் கூடாது. உன்னை அழைத்த தேவன் மௌனமாகவே இருக்கிறார் என்று நீ நினைக்காதே, உனக்கு ஒரு நல்ல எதிர்காலத்தைத் தரும்படியாக அவர் சில ஆயத்தங்களைச் செய்து வருகிறார். உன் வாழ்க்கையிலே நீ பெரிய காரியங்களைச் செய்ய உன்னைப் பழக்குவித்து வருகிறார். நீ நினைப்பதுபோல் அவர் மௌனமாய் இல்லை. **எருசலேமிலிருந்து சுவிசேஷம் செல்ல வேண்டும்** (ஏசாயா 2:3, மீகா 4:2). சென்னைப் பட்டணந்தான் உன்னுடைய எருசலேம். நீ இந்த நகரத்தை விட்டுப் போகக் கூடாது. வேகவைத்த மரவல்லிக் கிழங்கு உனக்கு மிகவும் விருப்பம் என்றும் இப்போது நீ மிகுந்தப் பசியுடன் இருக்கிறாய் என்றும் என்னிடம் ஆண்டவர் மிகவும் தெளிவாய்ச் சொன்னதால், என்னிடமிருந்த

கொஞ்சப் பணத்துக்கு இதோ இந்தப் பொட்டலத்தில் உள்ள வேக வைத்த மர வல்லிக் கிழங்கையும் உனக்காக வாங்கி வந்துள்ளேன். முதலில் இந்த பொட்டலத்தைப் பிரித்து சாப்பிடு".

தேவனது அன்பு, அந்த வயதான ஊழியர் மூலம் என்னில் பாய்ந்தது. அவருக்குக் கீழ்ப்படியாமல் என்னால் இருக்க முடியவில்லை. ஒரு ஏழை ஊழியனான என்னிடம் தேவன் அற்புதமாய்க் கிரியை செய்ததை உணர்ந்தேன்.

அந்தப் போதகரிடமும் தேவனிடமும் மன்னிப்புக் கேட்டுத் தொடர்ந்து இதே நகரத்திலேயே எனது ஊழியத்தைச் செய்ய முற்பட்டேன்.

தேவன் என்னை ஆசீர்வதித்தார். சில மாதங்களுக்குப் பின் சென்னையில் வேறொரு பகுதிக்கு தேவன் என்னைக் கொண்டு சென்று ஒரு வெற்றியுள்ள ஊழியனாக என்னை மாற்றினார். அன்பு நண்பரே, உங்களை அழைத்த தேவன் உங்களை மறந்துவிட்டார் என்று எண்ணிக் கொண்டிருக்கிறீர்களா? உங்களது வளர்ச்சி மிகவும் மெதுவாக இருப்பதால் வேறு இடம் சென்று விடலாம் என்றோ அல்லது வேறு தொழிலுக்குச் சென்றுவிடலாம் என்று யோசித்துக்கொண்டிருக்கிறீர்களா? வேண்டாம், அவ்வாறு நீங்கள் செய்ய வேண்டாம். இதுவரை உங்கள் வாழ்க்கையில் எல்லாவற்றையும் நீங்கள் இழந்திருந்தாலும், உங்களுக்கு எதிர்காலம் என்று ஒன்று இன்னும் மீதியாயிருக்கிறது. ஒரு அற்புதத்தை எதிர்பாருங்கள். உங்கள் வாழ்க்கையில் கர்த்தர் ஒரு அற்புதத்தைச் செய்யப் போகிறார்!

**நானோ, ஜீவனுள்ளோர் தேசத்திலே கர்த்தருடைய நன்மையைக் காண்பேன் என்று விசுவாசியாதிருந்தால் கெட்டுப் போயிருப்பேன். கர்த்தருக்குக் காத்திரு; அவர் உன் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார்; திடமனதாயிருந்து, கர்த்தருக்கே காத்திரு.** சங்கீதம் 27:13,14.

************

... 6-ம் பக்கத் தொடர்ச்சி

## 3. மெத்தனத்திற்கும் மற்றும் சுய நீதிக்கும் எதிரான எச்சரிக்கை!

சிலநேரங்களில், தொண்ணூற்றொன்பது பேரில் நாம் ஒருவராக இருப்பது – பாதுகாப்பாகவும் உணருவது – மெத்தனத்திற்கும், சுயநீதி மனப்பான்மைக்கும் வழிவகுக்கும். இருப்பினும், தொண்ணூற்றொன்பது பேருக்கு உள்ள பாதுகாப்பு ஒரு தவறான பாதுகாப்பு உணர்வை உருவாக்கக்கூடும். மந்தையின் ஒரு பகுதியாக இருப்பது ஒருவரை ஆவிக்குரிய ரீதியில் நோய் எதிர்ப்பு சக்தி கொண்டவராகவோ அல்லது தன்னிறைவு பெற்றவராகவோ ஆக்குவதில்லை.

"எனக்கு மனந்திரும்புதல் தேவையில்லை" என்று நம்பக்கூடிய நீதிமான்களுக்கு இந்த உவமை ஓர் அறைகூவலாகும். எல்லோரும் தேவனுடைய கிருபைக்குட்பட்டவர்கள் என்பதை அவர்களுக்கு நினைவூட்டுவதன் மூலம் – பாதுகாப்பாக காணப்படுகிறவர்களும்கூட, **எல்லாரும் பாவஞ்செய்து, தேவ மகிமையற்றவர்களானோம்** (ரோமர் 3:23). இந்த வழியில், தொண்ணூற்றொன்பது பேர் மனநிறைவு அல்லது பெருமையின் அறிகுறிகளுக்காக நம்மை நாமே ஆராய்ந்து பார்ப்போம். நிற்கிறேன் என்று நீங்கள் நினைத்தால், கவனமாக இருங்கள். **நிற்கிறேன் என்று சொல்லுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக்கடவன்** (1 கொரிந்தியர் 10:12)

அன்பு நண்பர்களே,

காணாமல் ஆட்டைத் தேடும் மேய்ப்பனை நான் மிகவும் மெச்சிக்கொள்ளும் அதே வேளையில், தொண்ணூற்றொன்பது ஆடுகளின் மீது அவர் வைத்திருக்கும் நம்பிக்கைக்கும் நான் அதே அளவு நன்றியுள்ளவனாக இருக்கிறேன். அவை பாதுகாப்பாக இருந்தாலும், தவறான பாதுகாப்பு உணர்வுக்குள் விழாதபடி கிறிஸ்து அவர்களை எச்சரிக்கிறார். மந்தையில் அவற்றிற்குக் கிட்டிய இடம் ஒரு ஈவு என்பதை அவர்கள் அங்கீகரிக்க வேண்டும். அதைப் பாதுகாக்க மனத் தாழ்மையும், தொடர்ச்சியான மனந்திரும்புதலும் தேவை. உண்மையுள்ளவர்களுக்கும்கூட தொடர்ச்சியான புதுப்பித்தலும், தேவனுடைய கிருபையைச் சார்ந்திருத்தலும் தேவை என்பதை ஒரு ஜீவனுள்ள நினைவூட்டலாகச் செயல்படுவதே அவர்களின் பொறுப்பாகும்.

மற்ற தொண்ணூற்றொன்பது பேரும் ஒருவருக்காக ஜெபிக்க வேண்டும்.

************

## அழைப்பின் எதிரொலி யூடியூப் சானல்!

YouTube **வாசகர்களின் கருத்துக்கள்!**

LIKE COMMENT



சகோ. சசி திவாரி



சகோதரி மேரி சூசன்



சகோ. ஸ்டீபன் ரமணா



சகோ. ஷால் பெஞ்சமின் ஷிண்டே

**(i) சகோ. ஸ்டீபன் ரமணா, தென்னாப்பிரிக்கா**

வாவ்! இன்று காலை எவ்வளவு சக்திவாய்ந்த தேவசெய்தி! உண்மையிலே நான் ஆசீர்வதிக்கப்பட்டவன்.

**(ii) சகோ. சசி திவாரி, மும்பை**

ஊக்கமளிக்கும் தேவசெய்திக்கு நன்றி! தினமும் தேவசெய்தியாளருக்காகவும், மொழிபெயர்ப்பாளருக்காகவும் ஜெபிக்கிறேன்.

**(iii) சகோ. ஷால் பெஞ்சமின் ஷிண்டே, தானே**

கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! நான் உங்கள் செய்திகளை யூடியூபில் தவறாமல் பார்த்து வருகிறேன். உங்கள் தேவசெய்திகள் மூலம் கர்த்தர் என்னை ஆசீர்வதிக்கிறார். கர்த்தருக்கு நன்றி. தேவன் உங்களை மேலும் ஆசீர்வதிப்பாராக!

**(iv) மேரி சூசன், விசாகப்பட்டினம்**

காலை நேர யூடியூப் தேவசெய்திகளுக்கு நன்றி! நான் உண்மையில் ஆசீர்வதிக்கப்பட்டவள்.

Posted at "Egmore RMS Patrika Channel" RNI NO. 67380/93. Postal Regn. No. TN/CH/(C)/197/24-26 WPP NO. TN/PMG(CCR)/WPP-158/24-26

## அழைப்பின் எதிரொலி

**YouTube (யூடியூப்)**

உங்களுக்கு நேரம் கிடைக்கும் போது நமது அழைப்பின் எதிரொலி (ECHO OF HIS CALL) யூடியூப் (YouTube) சேனலைப் பார்த்து Subscribe செய்ய வேண்டுகிறோம். நன்றி!

– ஆசிரியர்

## OUR BANK DETAILS:

### *1. Bank : State Bank of India*

| | |
|---|---|
| Branch | : **Triplicane, Chennai-5** |
| Name | : **S. Sam Selva Raj** |
| A/C No. | : **1023 2934 679** |
| IFSC | : **SBIN 00 00 249** |
| SWIFT CODE | : **SBI NIN BB 455** |

### *2. Bank : ICICI Bank*

| | |
|---|---|
| Branch | : **Anna Salai, Chennai-6** |
| Name | : **Echo of His Call** |
| A/C No. | : **6038 0502 2319** |
| IFSC | : **ICIC 000 6038** |

### *3. Bank : State Bank of India*

**(This Account is for Tax Exemption for Indians only )**

| | |
|---|---|
| Branch | : **Triplicane, Chennai-5** |
| Name | : **Echo of His Call Educational Trust** |
| A/C No. | : **1023 2923 805** |
| IFSC | : **SBIN 00 00 249** |

**Google Pay: 98410 71858**
**PayPal : SAM SELVA RAJ**
*****
E.mail : sam@echoofhiscall.org

## அழைப்பின் எதிரொலி ஊழியங்கள்

**மாதப் பத்திரிகை 16 மொழிகளில், வேதாகமக் கல்லூரிகள், தபால் வழிக் கல்விகள், சபைகளை ஸ்தாபித்தல், கிராம ஆங்கில உயர்நிலைப் பள்ளி, சுவிசேஷ அச்சகம், சுவிசேஷம், கருத்தாய்வுகள், சமூக சேவைகள் மற்றும் ஏனைய செயல்பாடுகள்**

❁ வருட சந்தா ரூ. 100/– ❁ ஆயுள் சந்தா ரூ. 2000/–

☞ **அழைப்பின் எதிரொலி** ஊழியத்தின் பல்வேறு ஊழியங்கள், நமது பங்காளர்களால் அளிக்கப்படும் சுயவிருப்பக் காணிக்கை மற்றும் நன்கொடைகளினால் நடைபெற்று வருகின்றன. தேவன் உங்கள் உள்ளத்தில் அளித்த விருப்பத்தின்படி நமது ஊழியங்களைத் தாங்கும்படி கேட்டுக்கொள்கிறோம். சுவிசேஷம் சென்றடையாத இடங்களில் சுவிசேஷத்தினை கொண்டு சேர்த்திட மற்றும் சபைகள் ஸ்தாபிக்கப்பட உங்கள் உதவி எங்களுக்கு தேவை.

☞ உங்கள் விலாசம் அல்லது மின்னஞ்சல் மாறினால், உங்கள் பழைய விலாசத்தையும் புதிய விலாசத்தையும், புதிய மின்னஞ்சலையும், உங்கள் பதிவு எண்ணையும் உடனே எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை உங்களுக்குத் தவறாமல் கிடைக்க வேண்டுமானால் எங்களுக்குக் கடிதம் எழுதுங்கள்.

☞ நம் **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைகள் 16 மொழிகளிலும் நமது இணையதளங்களில் (Websites) வெளியாகின்றன. அவற்றிலிருந்து படித்தும், பதிவிறக்கம் செய்தும் பயன்பெறுங்கள்.

☞ உங்கள் கடிதங்கள், ஜெப விண்ணப்பங்கள், காணிக்கைகள் முதலியவற்றை காசோலை (Cheque), மணிஆர்டர் (M.O.) அல்லது டிமாண்ட் டிராப்ட் (D.D.) **NEFT, PayPal (Sam Selva Raj, sam@echoofhiscall.org) PhonePe (98410 71858), Gpay (98410 71858), Western Union, MoneyGram, etc.** மூலம் **Echo of His Call** என்ற பெயரில் கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்புங்கள். Online மூலமாகவும் அனுப்பலாம்.

☞ உங்கள் E.mail முகவரி மற்றும் செல்போன் / தொலைபேசி எண்களை எங்களுக்கு அனுப்புங்கள். தேவைப்படும்போது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகையை E.mail மூலம் அனுப்ப உதவியாக இருக்கும்.

**சகோதர, சகோதரிகளே எங்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள்.** 1 தெசலோனிக்கேயர் 5:25.

**அழைப்பின் எதிரொலி,**
10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.
தொலைபேசி : (+91 – 44) 2852 8282, 2852 9293, 2854 7766 செல்: (+91) 98410 71852, 95661 31858
E.mails : sam@echoofhiscall.org / biblecor@yahoo.co.in
Websites : www.echoofhiscall.org / www.stpaulsmatriculation.com

**YOU CAN SEND YOUR DONATION ONLINE ALSO**

Regd. with the RNI under No. 67380/93
Licenced to post without pre-payment
Postal Regn. No. TN/CH/(C)/197/24-26
Licence No. WPP - TN/PMG(CCR)/WPP-158/2024-26
Date of Publication: last week of previous month
Date of Posting : 27th & 28th of previous month
Posted at "Egmore RMS Patrika Channel"
on 28th APRIL 2025
If un-delivered please return to:
ECHO OF HIS CALL (TAMIL)
P.O. Box No. 2957, Chepauk, Chennai - 600 005, INDIA.
Phone: (+91-44) 2852 8282, 2852 9293, 2854 7766

*JESUS LOVES YOU!*

To

*GOD BLESS YOU!*

Owned and published by **S. Sam Selva Raj** from New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005 and printed by **S. Sam Selva Raj** at **Echo of His Call Printers,** New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005. Editor: **S. Sam Selva Raj.**